இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 03 – புதன்கிழமை 19 ஜூலை 2023 – சென்னை 12 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 339 : Thiruvalluvar Year - 2054 - Aadi 03 - Wednesday 19 July 2023 - Chennai 12+12 Pages ₹ 5.00

## தனித்துவம் மிக்க தமிழ்நாட்டின் ஒளி இந்தியா முழுதும் பரவட்டும்!

# ‘தமிழ்நாடு’ - சொல் அல்ல; தமிழரின் உயிர்!




கர்நாடக மாநிலம், பெங்களூருவில் நேற்று (18.7.2023) நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா, திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் தில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சியின் தலைவரும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சருமான ஹேமந்த் சோரன், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், சிவசேனா கட்சித் தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் திருமதி மெகபூபா முப்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூலை 19 -**

**‘தமிழ்நாடு நாளை’யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தனித்துவம் மிக்க தமிழ் நாட்டின் ஒளி, இந்தியா முழுதும் பரவட்டும் என்றும்; தமிழ்நாடு என்பது வெறும் சொல் மட்டும் அல்ல; தமிழரின் உயிர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

‘தமிழ்நாடு’ சொல் அல்ல; தமிழரின் உயிர்!

பரந்து விரிந்த நமது இந்தியத் துணைக்கண்டத்துக்கு அழகு சேர்ப்பது, இங்குள்ள பன்முகத்தன்மையே!

1956 நவம்பர் 1 அன்று மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, மெட்ராஸ் மாகாணத்தில் இருந்து பிரிந்து சென்று புதிய மாநிலங்கள் தோன்றின. ஆனால், நம் தாய் நிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் பெற இன்னும் பதினொரு ஆண்டுகள் காக்க வேண்டியதாயிற்று!

1967இல் இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு மாநிலக் கட்சியான தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. தமிழ் நிலத்தின் பெருமகன் தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார்; 1967 ஜூலை 18 இல் ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்டினோம்!

மறைமலை அடிகள், தந்தை பெரியார், சோமசுந்தர பாரதியார், சங்கரலிங்கனார், சிலம்புச் செல்வர் ம.பொ.சி என இந்தப் போராட்டத்தின் வேர் மிக ஆழமானது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தமிழ்நாடு நாளில், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்கிடப் பாடுபட உறுதியேற்போம்! தனித்துவமிக்க தமிழ்நாட்டின் ஒளி இந்தியா முழுதும் பரவட்டும்!

தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு ‘மெட்ராஸ் பிரசிடென்ஸி’ மெட்ராஸ் மாகாணமாக மாறியது. 1956 நவம்பர் 1-ம் தேதி மதராஸ் மாநிலம் உருவானது.

1967 ஜூலை 18ம் தேதி மதராஸ் மாநிலம், அதிகாரப்பூர்வமாக ‘தமிழ்நாடு’ என்று பெயர் பெற்றது.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள், தங்களது மாநிலம் வேறு மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட தினத்தை, அவர்களது மாநில தினமாகக் கொண்டாடி வருகின்றன. ஆனால், தமிழ்நாடு எந்த மாநிலத்திலிருந்தும் பிரிக்கப்படாத மாநிலமாக இருந்ததாலும், முன்பிருந்த சென்னை மாகாணத்திலிருந்தே வேறு சில மாநிலங்கள் பிரிக்கப்பட்டதாலும், மாநில தினம் என்று எந்த நாளும் குறிப்பிடப்படாமலேயே இருந்தது.

இந்நிலையில், 2019ல் ‘இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நவம்பர் 1ம் தேதி தமிழ்நாடு மாநில தினமாகக் கொண்டாடப்படும்’ என்ற அறிவிப்பை அப்போதைய அ.தி.மு.க. அரசு வெளியிட்டது.

2021-ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு பதவியேற்ற பிறகு, முதல்வர் மு.க. ஸ்டாலின், ‘1956 நவம்பர் 1 ல் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதனடிப்படையில் அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## அமலாக்கத் துறையின் விசாரணையை துணிச்சலுடனும் சட்டரீதியாகவும் எதிர்கொள்க!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் அமைச்சர் க.பொன்முடிக்கு ஆலோசனை!

சென்னை, ஜூலை 19-

அமலாக்கத் துறையினரின் விசாரணையை துணிச்சலுடனும் சட்ட ரீதியாகவும் எதிர்கொள்ள அமைச்சர் க. பொன்முடியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

உயர்கல்வி அமைச்சர் பொன்முடி அவர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அமலாக்கத்துறையினர் நடத்திய விசாரணை விவரங்களை கேட்டறிந்த முதலமைச்சர், துணிச்சலுடனும் சட்ட ரீதியாகவும் எதிர்கொள்ளுமாறு அறிவுரை கூறினார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை எதிர்த்து நின்று முறியடிக்க தார்மீக ரீதியாகவும், அரசியல் மற்றும் சட்டரீதியாகவும் கழகம் என்றும் துணை நிற்கும் என பொன்முடியிடம் முதலமைச்சர் தெரிவித்தார்.

**அமைச்சர் க.பொன்முடியுடன், அமைச்சர்கள் சந்திப்பு!**

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள இல்லத்தில் அமைச்சர் க.பொன்முடி இல்லத்திற்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ரகுபதி, ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, சி.வி. கணேசன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் நேரில் சென்று, அமைச்சர் க.பொன்முடியை சந்தித்துப் பேசினர்.

இதேபோல், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ் பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், தயாநிதி மாறன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் எம்.பி. ரவிக்குமார், டி.கே.எஸ்.இளங்கோவன், வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார் ஆகியோரும் சைதாப்பேட்டை இல்லத்திற்குச் சென்று அமைச்சர் க.பொன்முடியை சந்தித்துப் பேசினர். மேலும், விழுப்புரம் மாவட்ட கட்சி நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் பொன்முடியை சந்தித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஒன்றிய அரசின் கைப்பாவையாக அமலாக்கத்துறை செயல்படுவதாகவும், அமைச்சர் க. பொன்முடியை, அமலாக்கத் துறை அலைக்கழிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

## பா.ஜ.க.வை வீழ்த்த எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளோம்!

# 2024-ல் புதிய இந்தியாவாக அமையும்!

### பெங்களூருவிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் விமான நிலையத்தில் பேட்டி!

**சென்னை, ஜூலை 19 -**

**பெங்களூருவில் நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்கேற்று நேற்று இரவு சென்னை திரும்பிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், பா.ஜ.க.வை வீழ்த்த எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளோம் எனவும், வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அதாவது 2024-ல் புதிய இந்தியாவாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.**

கர்நாடகா மாநிலம், பெங்களூரில் நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு நேற்று (18.7.2023) சென்னை திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

**செய்தியாளர்**: *பெங்களூரு பயணம் எப்படி இருந்தது?*

முதலமைச்சர் அவர்களின் பதில் மிகவும் சிறப்பாக இருந்தது. வெற்றிகரமாக அமைந்தது. உங்களுடைய வாழ்த்துகளுடன் மிகவும் சிறப்பாக நடந்தது கூட்டம். அந்தக் கூட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால்,

### ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை அருகில் அமர வைத்து அரவணைக்கும் பிரதமர் மோடி!

இந்தியாவினுடைய ஜனநாயகம், அரசியலமைப்புச் சட்டம், மதச்சார்பின்மை, மாநில சுயாட்சி, ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படக்கூடிய நலன், இதையெல்லாம் இன்றைக்கு மிகப்பெரிய இந்தியாவை பொறுத்தவரைக்கும், மிகப் பெரிய நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. சர்வாதிகாரம், ஒற்றைத் தன்மை எதேச்சதிகாரம், அதிகார குவியல் இதில் சிக்கி, இன்றைக்கு இந்த நாடு சிதையுண்டு போய்க் கொண்டிருக்கிறது.

அதனால், அப்படிப்பட்ட மத்தியில் இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக வருகிற 2024ஐ மையமாக வைத்து பாராளுமன்றத்தில் அந்த வெற்றியை பெறவேண்டும் என்பதற்காக இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறது. அதனுடைய முதல் கூட்டம் பாட்னாவில் நடந்தபோது,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்





கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் நேற்று (18.7.2023) நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், துணை மேயர் ஆகியோர் உள்ளனர்.